**E.A.06/2025 in E.P.No. 66/2024**
**எ.ம..சா.1 : நாச்சம்மாள்.**
**தேதி : 04.03.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:—**

சரண்யா என் மருமகள் ஆவார். தக் ஷிதா என் பேத்தி ஆவார். முத்துசாமி என் கணவர். 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். மனுச்சொத்துக்கள் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டு பிறகு முருகேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். முத்துசாமி மனுச்சொத்துக்களை சுய சம்பாத்தியம் மூலம் வாங்கி முத்துசாமி உயிருடன் இருந்த காலத்திலேயே அவர் மகன்களாக மனுதாரரின் தகப்பனார் வீரப்ப கவுண்டர், அவரது மனைவி மருதாயி, மற்றொரு மகனான பழனியப்பகவுண்டர், சின்னப்பகவுண்டர் மற்றும் அவரது மகளுக்கு 1962 ல் ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வீரப்பகவுண்டர் மற்றும் மருதாயி இறந்தபிறகு அவர்கள் இருவருக்கும் பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்கள் மனுதாரரான சுப்பிரமணியத்திற்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. முத்துசாமியின் மற்ற மகன்களான பழனியப்பகவுண்டர், சின்னப்பகவுண்டர் ஆகியோரும், மனுதாரரும் சேர்ந்து இன்றைய தேதி வரை ஒன்றாக கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.131/2023 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் மனுதாரர் மற்ற பங்குதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் கேள்விப்பட்டேன். முத்துசாமிக்கவுண்டர் அவரது மகள் செய்யம்மாளுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் படி செய்யம்மாளுக்கு அவரது ஆயுள்காலம் வரை தான் அனுபவித்து வரும்படியும், அவர் இறந்த பிறகு முத்துசாமியின் ஆண்வாரிசுகளுக்கு மனுதாரர்களுக்கு செல்லவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கு இன்று

வரை நிலுவையில் உள்ளது என்றும் நீங்கள் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்று தவறாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுச்சொத்துக்களை பொறுத்து 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வளவு பங்கு உள்ளது உங்களுக்கு தெரியுமா என்றால் 4 ல் 1 பங்கு வரும். 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படாத சொத்துக்களை அவருக்கு 3ல் 1 பங்கு பாத்தியம் வரும் என்று தவறுதலாக சொல்லி முன்ஜப்தி செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுச்சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதால் நீங்கள் 3ல் 1 பங்கு சொத்து என்று முன்ஜப்தி செய்திருப்பது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் மனுச்சொத்துக்களை பொறுத்து அவரது சட்டப்படி கோருரிமை பாதிக்கக்கூடாது என்று மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் கோரியபடி கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. முருகேசனுக்கு பாத்தியமே இல்லாத சொத்துக்களை பொறுத்து மிகைப்படுத்தி 3 ல் 1 பங்கு பாத்தியம் என்று சொல்லி முன்ஜப்தி செய்துள்ளது சட்டப்படி தவறு என்றும் அது நீக்கறவு செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.04 18:12:10 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.